With Best Compliments
HEARING AIDS


Authorised Hearing Care Centre
JAGADISH HEARING AIDS
No.3, Kutchery Road, Mylapore, Chennai-4.
24640968 / 9444851663

# MYLAI EXPRESS

*Neighbourhood Newspaper*

Read our PAPER @
www.mylaiexpress.com

Free Circulation


For online Flute & Vocal Music Classes
Ct: hemflute@gmail.com

VOL - 7 ISSUE - 35 Office:9840643902/49574279 e-mail: mylaiexpress1@gmail.com Feb 9 - 15, 2018

### MORE THAN 22,000 APPLICATIONS RECEIVED FOR AMMA TWO WHEELER SCHEME IN THE CITY

Amma two wheeler scheme for working women application forms as on Feb' 5th the corporation received 22,960 applications and the Minister for Local Administration extended the deadline date



from 5th to 10th Feb' because of requests from Women. Tondairpet zone (R.K.Nagar) received maximum application of 3,317 while Teynampet received 2,076 and Adyar 2,101 and Manali 416 least among the 13zones in the city. A maximum of 50% subsidy of the cost of the two wheeler or 25,000 whichever is less will be subsidised for the beneficiary. The applicant should be a native and resident of TamilNadu in the age group of 18to 40 years should possess a valid driving license. The government propose to identify just 9,500 women in the Greater Chennai Corporation first under the scheme. As many as 1.74 lakh applications have been received from working women in the State.

EXPRESS COURIER & CARGO
to USA , UK, CANADA ......
We accept Home made / Branded Sweets, Savouries, Pickles, Thokus, Vadams, Appalams, Electronics, Medicines & More
FREE PACKING & GAURANTEED
2-3 WORKING DAYS DELIVERY

SPL RATES FOR BULK BOOKINGS
PLS CALL US 9840386615 / 9940100200 / 9940211044
044 - 43533425 / 48636456

### RELEASE OF KRISHNA WATER TO CITY RESERVOIRS TO BE STEPPED UP



Water Sources Department officials visit to Tirupathi last week follows an increase in Krishna Water release to City reservoirs were stepped up on Feb' 3rd to meet the requirement of drinking water to Chennai. Poondi canal received around 407 cusecs of Krishna water last week. Poondi reservoir which stores Krishna water has touched half of its storage capacity. The Andhra Pradesh officials have assured to step up the release to enable Chennai to receive 3,000 million cubic feet to 3500 mcft of water. A priority will be given to the drinking water needs of Chennai said an official. The combined storage of the four reservoirs in Poondi, Red hills, Cholavaram and Chembrabakkam stood at 4,904 mcft on Feb'2nd which is nearly 44% of its total capacity. If we have 8,000 mcft level in the reservoirs we consider it a comfortable level to supply water for a year says an official. As of now the summer may be comfortable for the city in terms of drinking water supply says authorities.

### CONSTRUCTION PERMITS NORMS SET TO BE RELAXED

Following widespread reports of inordinate delays in issuing construction permits in the city and suburbs for building individual plots in layouts the government had asked the Chennai Metropolitan Development Authority (CMDA) to explore the possibility of speeding up the process and relaxing the norms . Of the 2,200 applications received by the Chennai corporation in the past eight months ,just four planning permits have been issued so far. The CMDA officials decided to stop demanding the entire encumbrance certificate for the entire layout and the EC for individual plot for construction should suffice said an official CMDA officials were directed to increase the manpower and not to ask for' unnecessary' details for issuance of the principle sanction.

## PARATHPARA PARAMESHWARA FLUTE CONCERT
## N.N.HEMANAND NARAYANA



**Date : 11.02.2018 SUNDAY Time : 4.30 PM**

N.N.Hemanand Narayana (Flute)
Usha Rajagopalan (Violin)
M.P. Ramesh (Mrudangam)
Kannan (Kanjira)

VENUE - Bharatiya Vidya Bhavan
Viswanath Trivedi Saba Graha, 18,20,22,
East Mada St, Mylapore, Chennai - 600 004

**ALL ARE WELCOME**

## வி.சி.கார்டன் முதல் தெரு



மந்தவெளியில் செயின்ட் மேரி சாலை அருகில் உள்ள வி.சி.கார்டன் முதல் தெரு கடந்த ஒரு வருட காலமாக பழுதடைந்து போக்குவரத்துக்கு மிகவும் இடையூறு தந்தது. சென்னை மாநகராட்சி இங்குள்ள கழிவுநீர் குழாய்களும் மற்ற குழாய்களையும் பழுது பார்த்து, சென்ற வாரம் சாலையையும் மிகவும் நேர்த்தியாக அங்கு வசிக்கும் மக்கள் மனமும் மகிழ சீராக மாநகராட்சியும் அமைத்துள்ளது

# CLASSIFIEDS

## TYPING

Tamil & English DTP & Book work will be undertaken @ reasonable cost

CONTACT

**8072753760**

## HOME FOOD

Tasty Homely prepared Bengali Rasagulla and Chappati, Aloo Parota available in Mylapore, Chennai.
7am to 8 pm
Party Orders also undertaken

Contact **9962510699**
**9884727351**

## HINDI TUITION

HINDI TUITIONS UNDERTAKEN @ RAPURAM FOR SCHOOL STUDENTS UPTO CLASS V AND PRACHAR SABHA EXAMS

**7550266431**

## PRANAVAMM HOME NEEDS

HOME MADE APPALAM, VADAM, VATHALS, PICKLES, PODI & SNACKS WHOLESALE & RETAIL DEALER

New No.24, Old No.89, Adam Street, Mylapore, Chennai-600 004.

**9444102394**

---

# தமிழ் & English Typing, DTP, Book Work, Job Typing, Project Works, Designing Works and All Printing Jobs Undertaken at an affordable cost



# SJ DATA ENTRY

## @ MYLAPORE

Contact


**Ph: 9042661331 / 044-49574279**

**Email: sjdataentry@yahoo.com**

---

அன்பை வெளிப்படுத்தும் எதையும் கொண்டு வாருங்கள் என்று நான்கு மாணவிகளை அனுப்பினார் ஆசிரியை..!
திரும்பி வந்த ஒரு மாணவியின் கைகளில் மலர் இருந்தது..! இன்னொரு மாணவியிடம் வண்ணத்துப் பூச்சி இருந்தது..! மற்றொரு மாணவியிடம் ஒரு குஞ்சுப்பறவை இருந்தது..! முதலில் கிளம்பிப்போன மாணவியோ கடைசியில் வெறுங்கையோடு திரும்பி வந்தாள்..! ஏனென்று கேட்டபோது சொன்னாள்:-

நானும் மலரைப் பார்த்தேன். அழகாய் இருந்தது. செடியிலேயே இருக்கட்டும் என்று விட்டுவிட்டேன்..! வண்ணத்துப் பூச்சியைப் பார்த்தேன். அழகாய் இருந்தது. சுதந்திரமாய்ப் பறக்கட்டும் என்று விட்டுவிட்டேன்..!



குஞ்சுப் பறவையைப் பார்த்தேன். தாய்ப்பறவை தேடுமென்று விட்டுவிட்டேன்...! அந்த மாணவியை அணைத்துக் கொண்ட ஆசிரியை சொன்னார், 'அன்பு என்றால் இது தான்' ஒன்றுமே கொடுக்க வேண்டாம். எதையுமே பறிக்காமல் இருந்தால் அதுவே போதும்...! எதையும், யாரையும் காயப்படுத்தாமல் இருப்போமே...! நாம் உலகிற்கு எதையேனும் கொடுக்க வேண்டுமென நினைத்தால் அன்பைக் கொடுப்போம்...!

ஏனெனில் உலகில் எங்கும் பரவிக் கிடப்பது அன்பு ஒன்று தான்...! ஆனால் உலகம் அதிகமாக ஏங்கிக் கிடப்பதும் அதே அன்புக்காகத்தான்...! அனைவரிடமும் அன்புடன் பழகுவோம்...! கொண்டு செல்ல எதுவுமில்லை கொடுத்துச் செல்வோம் உண்மையான அன்பை.

# Events of this week........

## SRI RAMAKRISHNA MATH

**Maha Sivaratri Programme**

| | | |
|---|---|---|
| 14.2.2018 | 8.00 pm | Special Puja & Bhajan |
| 15.2.2018 | 4.00 am | Homa |
| | 5.15 am | Prasad |

**Venue : Sri Ramakrishna Math, Mylapore**

## LAYAPRIYA
## 26TH YEAR MAHASHIVARATHRI MUSICAL NIGHT

**13.02.2018 - TUESDAY**

| | |
|---|---|
| 5.00pm to 6.30pm | Vocal concert by T.M.Krishna & Party |
| 6.45pm to 8.15pm | Vocal concert by Nithyashree Mahadevan Party |
| 8.30pm to 9.30pm | Music Ensemble by Layapriyan Papanasam R.Kumar & Party |
| 9.45pm to 11.15pm | Vocal concert by K.Gayathri & Party |
| 11.30pm to 12.45pm | Vocal concert by Ashwath Narayanan & Party |

**14.02.2018 WEDNESDAY**

| | |
|---|---|
| 1.00 am to 2.00am | Vocal concert by Hyderabad Srividya Sriram & Party |
| 2.15am to 3.30am | Vocal concert by Bharath Sundar & Party |
| 3.45pm to 4.45am | Vocal concert by Sriranjani Santhanagopalan & Party |
| 5.00am to 6.00 am | Namasankeerthanam by Papanasam Ramani Bhagavathar & Party |

**Venue : Bharathiya Vidya Bhavan Main Hall, Mylapore**

## NAADA INBAM

| | | |
|---|---|---|
| 10.2.18 | 6.00pm | Ramnad Krishnan Centenary Celebrations Concert - Rithvik Raja & Party |
| 11.2.18 | 10.15am | NADAMRTA & Naada Inbam presents a concert by Emmanelle Martin & Party |
| | 6.00pm | Kalaimamani G.Harishankar Remembrance Day - Audio Video presentation followed by Tributes by Madirimangalam Swaminathan & Prapancham S.Balachandran. Award to Senior Ghatam Exponent Coimbatore V.Mohan Ram |
| | 7.15pm | Vocal Concert by Sikkil C.Gurucharan & Party |
| 12.02.18 | 5.00pm | Rukmini Arts & Music Trust - Sowmya Sudarshan & Party |
| | 6.45pm | Flute concert by Prapancham S.Balachandran & Party |
| 13.02.18 | 6.15pm | NAADA INBAM - Shivarathri Special concert - V.Bhavana Iyer & Party |
| 14.02.18 | 6.15pm | NAADA INBAM - Aishwarya Madhavan & Party |
| 15.02.18 | 6.15pm | NAADA INBAM - SVK Remembrance Day concert Ashwath Narayanan & Party |
| 16.02.18 | 6.15pm | GURUGUHAAMRTA presents "Thyagaraja Vibhakthi Krithis of Mudduswami Dikshithar - rendition by Vidvan T.M.Krishna & Disciples. |

**Venue : Ragasudha Hall Luz Avenue, Mylapore**

**Loka Dharma Seva Foundation Trust**, Kilpakkam, Chennai-6000010 is organizing SwachhMandir event, a Temple Cleaning project 148 month at Shri. Varagur Selva Vinayagar temple, Near Madhava Perumal Temple, Mylapore, Chennai-4 on Sunday 11 February, 2018 - Between 9AM to 1PM. [Lunch arranged]

Contact Dr. R. Subramanian for details:
Tel: 24981559 / 944 438 1476
E-mail ID: resubramn@yahoo.com

## HOME DAY CELEBRATIONS

RAMAKRISHNA MISSION STUDENTS HOME celebrated Annual Sports Meet and Home Day Celebrations to be held on 10th and 11th February 2018.

**Venue : Ramakrishna Mission Students Home, P.S.Sivaswami Salai, Mylapore, Ch-4.**

## MARTYR DAY AND SARVODAYA DAY ON 30TH JANUARY 2018



The Chennai based Gandhi Peace Foundation conducted a Workshop for college and school students on the subject "how to inculcate values for peace in the youth through stories". The 150 stories written by Dr.S.Kulandaisamy, Secretary of Gandhi Peace Foundation, Madras were the content of the workshop. The students were also taught to read aloud and enjoy the stories. The session was conducted by Mr.M.D.Chander, the Programme Coordinator. With an aim to promote a culture of peace among the youth, a website in the name "gandhipeace.foundation" was launched by Mr.Arun, the website designer and was declared open by Dr.C.Shenbagavalli, Joint Secretary, Gandhi Peace Foundation, Madras. Then an All Religions Prayer for Peace was offered by the participants from seven religions- Hinduism, Islam, Christianity, Sikhism, Jainism, Bhuddhism and Zoroastrianism. The one-day event was attended by 100 students and public.

## RAMANA SUNRITYA AALAYA TRUST
## MAHA SIVARATRI NRITYA SRUTI DANCE FESTIVAL

Maha Sivaratri Nritya Sruti Dance Festival @ Arulmigu Kapaleeswarar Temple on 13th to 15th Feb 2018 from 6 pm and at Arulmigu Apparswamy Kovil Mylapore, Chennai on 16th to 18th February 2018 from 6pm onwards. Fore more info contact : 044-24957607

## VIVEKANANDA NAVARATRI

PROGRAMME

10.2.18 Saturday

| | |
|---|---|
| 4.30 pm | Martial Arts, Mandolin by the Students of Meenakshi Arts & Science College, Chennai - 24. |
| 5:00 pm | Readings from Swami Vivekananda |
| 5:05 pm | Speech on Sister Nivedita by Swami Paramasukhananda |
| 5:35 pm | Cultural Programme by Lady Willingdon School Students |
| 6:05 pm | Music & Dance by the Students of Meenakshi Sundarrajan College, Chennai - 24. |

11.2.18 Sunday



| | |
|---|---|
| 5:00 pm | Readings from Swami Vivekananda |
| 5:05 pm | Violin Music by Shri Ramsundar |
| 5:35 pm | Cultural Programme by Manikka Manavargal of Nallorvattam, Chennai-24. |
| 6:05 pm | Spiritual Discourse on Swami Vivekananda by SHRI SHRI MURALIDHARA SWAMIGAL |

12.2.18 Monday

| | |
|---|---|
| 4.00 pm | Decorated Chariot of Swamiji will visit Pattinappakkam |

13.2.18 Tuesday

| | |
|---|---|
| 4.00 pm | Decorated Chariot of Swami Vivekananda will visit Ramakrishnapuram in Mylapore. |

14.2.18 Wednesday

| | |
|---|---|
| 5:00 pm | Readings from Swami Vivekananda |
| 5:05 pm | Speech & Bhajans by Swami Nilamadhavananda |
| 5:35 pm | Vilakku puja by Devotees at Vivekananda Park |



VIVEKANANDA HOUSE,

Sri Ramakrishna Math books will be on sale with discount up to 25%

ALL ARE WELCOME! ENTRY FREE

Publisher : K.Ganesh
Editor : N.Panchapakesan
Designer : Ushashankar

Our Office Address:
No.20/45, Alamelumangapuram,
Mylapore, Chennai - 600 004.
PH: 044-49574279

Email: mylaiexpress1@gmail.com
Website : www.mylaiexpress.com

DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Mylai Express does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Mylai Express shall not be held responsible / liable for any consequence, in case such claim.

FOR ADVERTISEMENT IN MYLAI EXPRESS CONTACT
9840643902
9884944452

# THYAGARAJA ARADHANA DAY











NARADAGANA SABHA in association with KARTIK FINE ARTS celebrated THYAGARAJA ARADHANA DAY @ its premises Alwarpet on February 4th. Many musicians and vidwans sang Thyagaraja's Pancharathana Krithis wonderfully & cheered rasikas gathered in large number at the hall on that day. After the concert a tasty and delicious lunch was served to all the rasikas as Prasadam with pleasure by the sabhas.

# SNAPSHOTS OF ART FEST 2018 CHENNAI












An Art Festival an affordable Art Fair was held @ Nageswararao Park, Mylapore, Chennai on 4th February from 8 am to 8pm. In the fest more than 75 artist displayed more than 100 Art works in a delightful way for the art lovers to cherish. In this year more than 700 to 800 people visited the art festival enthusiastically said the organizers.




1




2



3



ஸ்ரீ ராமஜெயம்

# ஆஸ்திக ஸமாஜம்

(நைமிசாரண்ய மண்டபம்)

2, வீனஸ் காலனி முதல் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
போன்:2435 2242 இ-மெயில்:asthikasamajam.venus@gmail.com

கீழ்கண்ட நிகழ்ச்சிகள் 20.02.2018 முதல் 03.04.2018 வரை
தினசரி மாலை 6.30 - 8.30 மணி வரை நடைபெறும்

உபன்யாஸ விபரம்

| தேதி | நிகழ்த்துபவர் | தலைப்பு |
|---|---|---|
| 20.022018 to 01.03.2018 | ஸ்ரீ கருணாகரசாரியார் | வெற்றிதரும் மந்திரங்கள் (தொடர்ச்சி) |
| 02.02.2018 to 09.03.2018 | கிடாம்பி ஸ்ரீ நாராயணன் | வால்மீகியும் கம்பனும் |
| 10.03.2018 to 16.03.2017 | ஈரோடு ஸ்ரீ பாலாஜி பாகவதர் | தியாகராஜர் ராமாயணம் |
| 17.03.2018 to 25.03.2018 | தாமல் ஸ்ரீ ராமகிருஷ்ணன்<br>ஸ்ரீமதி பெருந்தேவி | ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் |
| 25.03.2018 to 03.04.2018 6.00am onwards | ஸ்ரீ கணபதி ஹோமம்<br>ஸ்ரீ ராம ஷடாக்ஷரி ஹோமம்<br>ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூல பாராயணம்<br>ஸ்ரீ ராமருக்கு அபிஷேகம் மற்றும் ஸகஸ்ரநாம அர்ச்சனை (ஸகஸ்ரநாம அர்ச்சனை ரூ.200/-) | |
| 26.03.2018 to 03.02.2018 | இசை நிகழ்ச்சி பின்னர் அறிவிக்கப்படும் | |
| 03.04.2018 8.00pm | ஸ்ரீராமர் படம் வீதி உலா | |

குறிப்பு : ஆஸதிக அன்பர்கள் அனைவரும் ஸகஸ்ரநாம அர்ச்சனை செய்வதற்கு ரூ.200 செலுத்தி தங்களது கோத்திரம், நக்ஷத்திரம், ராசி, பெயர் மற்றும் முகவரியை தெரிவித்து முன்பதிவு செய்து கொண்டு ஸ்ரீ ராமபிரானின் அருளைப் பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

அனைவரும் வருக

ஸ்ரீ.ஜி.சீதாராமன்
தலைவர் (94440 81583)

ஸ்ரீ.எஸ்.வெங்கடேஸ்வரன் (94440 32191)
ஸ்ரீ.எஸ்.பாலாஜி (94440 43538)
செயலாளர்கள்

ஸ்ரீ.என்.ஜெயசந்திரன்
ஸ்ரீ. மோகன் ஸ்ரீநிவாஸ்
உபதலைவர்கள்

ஸ்ரீ.பி.ராமகிருஷ்ணன்
பொருளாளர் (93802 84435)


## SRI PARTHASARATHY SWAMI SABHA DANCE FESTIVAL 2018 - BHARAT NRITYA UTSAV

1. Bharathanatyam by Sri Sudarshini disciple of Guru Bragha Bessell on 5th February. 2. Bharathanatyam by disciples of Guru Maalini Balaji on 6th February 3. Bharathanatyam by S.Roopa disciple of Guru Divyasena on 7th February **@ RK Swamy Auditorium, Mylapore, Chennai.**



NAADA INBAM - Vocal concert by Usha Padmanabhan & Party on 6th February @ Raga Sudha Hall, Mylapore.

## தங்கப்பதக்கம்




மயிலை லேடீ சிவசுவாமி அய்யர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் டி.சத்யா என்கிற மாணவி புதுடெல்லியில் தேசிய அளவில் நடைபெற்ற முதலாம் ஆண்டு பள்ளிகளுக் கான KHELO INDIA தடகளப் போட்டியில் தங்க பதக்கத்தை வென்று சாதனை படைத்தார்.

## Express Cinema

**ஜான்சி ராணி படத்துக்கும் எதிர்ப்பு!**
பத்மாவத் படத்தைத் தொடர்ந்து மேலும் ஒரு படத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. படப்பிடிப்பிலிருக்கும் படம் ஞமணிகர்னிகா.' கங்கணா நடிக்கும் இந்தப் படம் ஜான்சி ராணி லட்சுமி பாய் கதையை மையமாக வைத்து எடுக்கும் படம். ராணியின் புகழை சீர்குலைக்கும் வகையில் படம் எடுத்துவருவதாகச் சர்வ பிராமண மகாசபை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.





**அஜித்துக்கு ஜோடியாகும் நயன்தாரா!**
அஜித்குமார் - இயக்குநர் சிவா கூட்டணி நான்காவது முறையாக இணையும் திரைப்படம் 'விசுவாசம்'. சத்யஜோதி ஃபிலிம்ஸ் தயாரிப்பில் இப்படம் தீபாவளி வெளியீடாக வரும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் நயன்தாரா இப்படத்தின் ஹீரோயின் வேடத்துக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

**சிவகார்த்திகேயனின் அடுத்த பட டைட்டில் என்ன?**
சிவகார்த்திகேயன் - பொன்ராம் கூட்டணியில் உருவாகும் படத்தின் டைட்டிலை சிவகார்த்திகேயனின் பிறந்தநாள் அன்று வெளியிட உள்ளனர். படத்துக்கு சீமைராஜா என்று டைட்டில் வைத்துவிடலாம் என்று பொன்ராம் யோசனைகூற, இல்லண்ணே... சீமைராஜாவைவிட சீமைத்துரை செம மாஸா இருக்கும்ல...' என்று யோசனை சொல்லியிருக்கிறாராம் சிவகார்த்திகேயன்.



- Courtesy TFN

# மகா சிவராத்திரி மகிமை



மகா சிவராத்திரி பண்டிகை இந்துக்களால் ஆண்டு தோறும் மாசி மாதத்தில் பௌர்ணமி முடிந்து பதினான்காவது நாளான சதுர்த்தசியில் கொண்டாடப்படுகிறது சிவராத்திரியை சிவன் + ராத்திரி எனப் பிரித்து சிவனை வணங்கும் இரவு என்று பொருள் கொள்ளலாம். இவ்விழாவின்போது மக்கள் பகல் மற்றும் இரவு நேரங்களில் விரதமிருந்து விழித்திருந்து வழிபாடு நடத்துகின்றனர். பொதுவாக சிவராத்திரியை நித்யசிவராத்திரி, மாதசிவராத்திரி, யோகசிவராத்திரி மற்றும் மகா சிவராத்திரி என்றெல்லாம் வகைப்படுத்தியுள்ளனர். நித்யசிவராத்திரி என்பது தினமும் வரும் ராத்திரியைக் குறிக்கும். மாதசிவராத்திரி என்பது ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி முடிந்து பதினான்காவது நாள் அதாவது சதுர்த்தசி திதியில் வரும் ராத்திரியைக் குறிக்கும். மகாசிவராத்திரி என்பது ஆண்டுதோறும் மாசி மாதத்தில் பௌர்ணமி முடிந்து பதினான்காவது நாள் வரும் சதுர்த்தசியில் (தேய்பிறை) வரும் ராத்திரியை குறிப்பதாகும்.

சிவராத்திரி பற்றிய கதைகள்

முன்னொரு சமயத்தில் விஷ்ணு மற்றும் பிரம்மா ஆகியோருக்கிடையே யார் பெரியவர் என்ற போட்டியின் போது சிவபெருமான் அவர்களுக்கிடையே பெரும் ஜோதி பிழம்பாகத் தோன்றி அவர்களின் போட்டியை முறியடித்தார்.சிவன் ஜோதிப் பிழம்பாகத் தோன்றிய நாளே திருக்கார்த்திகை என்று கொண்டாடப்படுகிறது. பின் விஷ்ணு, பிரம்மா மற்றும் ஏனையர் வழிபாடு செய்ததன் மூலம் ஜோதி ரூபத்திலிருந்து லிங்க வடிவமாக மாறி அவர்களுக்கு அருள் புரிந்த நாள் சிவராத்திரியாக கொண்டாடப்படுகிறது. ஒரு முறை ஏற்பட்ட பிரளயத்தின் போது உலக உயிர்கள் யாவும் அழிந்து இருள் சூழ்ந்து உலக இயக்கம் நின்ற போது உமையம்மை சிவனை வழிபட்டு மீண்டும் உலக இயக்கத்தை இறைவனிடம் வேண்டினார். உமையம்மைக்கு காட்சி அளித்த சிவன் உலக இயக்கத்தை தோற்றுவித்து தன்னை உமையம்மை வழிபட்ட நாளே தனக்கு உகந்த நாளாகும் அதுவே சிவராத்திரியாகும்.

அம்மையைப் போல் விழித்திருந்து வழிபடுவோருக்கு பிறப்பின்மை என்னும் மோட்சத்தை அளிப்பதாகவும் அருளினார் என்றும் அமுதம் பெறுவதற்காக பாற்கடலை கடைந்தபோது ஏற்பட்ட ஆலகால விஷத்தினை சிவன் உண்டு தன்னுடைய யோகத்தின் வலிமையால் அதனை தன்னுடைய தொண்டையில் இருத்தி நீலகண்டன் ஆனார். தங்களைக் காப்பாற்றிய சிவனை இரவு முழுவதும் விழித்து உலக உயிர்கள் வழிபட்ட நாள் சிவராத்திரியாகும் என்றும் கூறப்படுகிறது.

சிவராத்திரி விரதத்தின் மகிமைகள்

வேடன் ஒருவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றபோது வழி தவறி அடர்ந்த காட்டிற்குள் சென்றுவிட்டான். அப்போது புலி ஒன்று அவனை துரத்தியது. புலிக்கு பயந்து அருகில் இருந்த வில்வ மரத்தில் ஏறிக் கொண்டான். பகல் முடிந்து இரவு வந்துவிட்டது. புலியும் மரத்தடியை விட்டு அகலவில்லை. வேடன் உறங்காமல் இருப்பதற்காக வில்வ மரத்தின் இலைகளை பிய்த்து கீழே போட்டுக் கொண்டே இருந்தான். அவ்வப்போது வேடன் தாகத்திற்கு வைத்திருந்த நீரானது சிந்தியவாறு இருந்தது. வில்வ இலை மற்றும் நீரானது கீழே இருந்த சிவலிங்கத்தின் மேல் விழுந்ததை வேடன் கவனிக்கவில்லை. மேலும் அன்றைய நாள் சிவராத்திரியாகும். சிவன் வேடன் முன் தோன்றி அவனுக்கு ஞானம் மற்றும் செல்வத்தை வழங்கியதோடு இறந்த பின் மோட்சத்தையும் வழங்கினார். இதன் மூலம் சிவராத்திரி என்று அறியாமல் வேடன் செய்த செயல்கள் அவனுக்கு நற்பேற்றினை வழங்கின. இதுவே சிவராத்திரி மகிமை ஆகும்.


சிவராத்திரி வழிபாடு மற்றும் விரத முறைகள்

சிவராத்திரி அன்று, விரதம் இருப்போர் பகல் நேரத்தில் உணவு அருந்தாமல் விரதம் மேற்கொள்கின்றனர். அன்றைய தினம் அதிகாலையில் எழுந்து நீராடி தூய்மையான ஆடைகள் அணிந்து சிவாலயத்திற்கு சென்று வழிபாடு நடத்துகின்றனர். பகல் நேரத்தில் உணவருந்தாமல் விரதம் மேற்கொண்டு சிவ சிந்தனையோடு இருக்கின்றனர். ஒரு சிலர் நீர் கூட அருந்தாமல் கடுமையான விரதத்தினை மேற்கொள்கின்றனர்.மாலை நேரத்தில் மீண்டும் நீராடி பின் சிவாலயத்திற்கு சென்று அங்கு நடைபெறும் நான்கு வேளை இரவு வழிபாட்டில் பங்கேற்கின்றனர். இரவு முழுவதும் விழித்திருந்து சிவன் பற்றிய பாடல்கள் மற்றும் சிவனின் மூல மந்திரமான ''ஓம் நமச்சிவாய'' மந்திரத்தை கூறி வழிபாடு நடத்துகின்றனர். நான்கு வேளை இரவு வழிபாட்டின் போது இறைவனுக்கு பால், நெய், தயிர், அன்னம், சந்தனம், வாசனைப் பொடி, இளநீர், பன்னீர் போன்ற பொருட்களால் அபிஷேகம் செய்யப்படுகிறது. இறைவனை வில்வம் இலைகள் மற்றும் ருத்திராட்ச மாலை மற்றும் பூக்களால் அலங்காரம் செய்கின்றனர். சிவலிங்கத்தின் உச்சியில் வில்வ இலைகளை வைத்து வழிபடுகின்றனர். தீபங்கள் ஏற்றப்படுகின்றன. பல்வேறு வகையான உணவு பொருட்கள் நைவேத்தியமாக படைக்கப்படுகின்றன. மறு நாள் காலை வீட்டிற்கு வந்து நீராடி மீண்டும் சிவாலயம் சென்று இறைவனை வழிபட்டு சிவராத்திரி விரதத்தினை முடிக்கின்றனர். சிவராத்திரி விரதமிருப்பதால் மீண்டும் பிறவாமை என்கின்ற மோட்சம் கிடைப்பதாக மக்கள் கருதுகின்றனர். திருமணமான பெண்கள் தங்கள் கணவனின் நலம் மற்றும் ஆரோக்கியத்திற்காகவும், கன்னிப் பெண்கள் நல்ல கணவன் கிடைக்கவும் இவ்விரதத்தினை மேற்கொள்கின்றனர்.



### சிவராத்திரியன்று மயிலையில் பக்தர்கள் தரிசிக்க வேண்டிய 7 சிவஸ்தலங்கள்

1. கபாலீஸ்வரர் ஆலயம் - மயிலை
2. வள்ளீஸ்வரர் ஆலயம் - மயிலை
3. காரணீஸ்வரர் ஆலயம் - பஜார் ரோடு, மயிலை
4. மல்லீஸ்வரர் ஆலயம் - பஜார் ரோடு, மயிலை
5. விருப்பாட்சீஸ்வரர் ஆலயம் - பஜார் ரோடு, மயிலை
6. வாலீஸ்வரர் ஆலயம் - பஜார் ரோடு, மயிலை
7. தீர்த்தபாலீஸ்வரர் ஆலயம் - ஐஸ் ஹவுஸ்.



# காஞ்சி மகானின் மகிமைகள்



''நாங்கள் காஞ்சி மகான் உத்தரவுப்படி வந்திருக்கிறோம். உங்கள் பெண்ணின் திருமணத்தை நல்லவிதமாக நடத்தித் தரச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்'' முசிறியில் சிவன் கோயிலில் அர்ச்சகர் அவர். சொற்ப வருமானம். அவர் மனைவிக்கோ ஈஸ்வரன் மீது இருந்த பக்தியை விட காஞ்சி முனிவர் மீது பக்தி அதிகம். சதா சர்வகாலமும் மகா பெரியவாளை மனதால் ஜெபித்துக் கொண்டே இருப்பார். இந்தத் தம்பதியின் ஒரே பெண்ணிற்கு வரன் குதிர்ந்தது. 'கோயில் காணிக்கையைக் கொண்டு குடும்பம் நடத்துவதற்கே சிரமமாக இருக்கிறது இந்திலையில் மகளின் திருமணத்தை நடத்த வேண்டுமே' என கவலை கொண்டனர். காஞ்சியில் மகானைத் தரிசித்த பிறகே தன் தொழிலைத் தொடங்கும் விசைத்தறி அதிபர் ஒருவர் இருந்தார். அவர் பெரியவா தரிசனத்திற்கு வந்த போது அவரை அருகே அழைத்த பெரியவா, ''எனக்காக நீ ஒரு காரியம் செய்யணுமே!'' என்றார். ''சொல்லுங்கள் காத்திருக்கிறேன்'' என பணிவுடன் கூறினார் விசைத்தறி அதிபர். மகான் நிதானமாகச் சொன்னார்: ''முசிறியில் ஒரு ஈஸ்வரன் கோயில் இருக்கிறது. அங்குள்ள அர்ச்சகர் பரம ஏழை! அவர் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது. நீ அங்கு போய் தங்கி, அந்தப் பெண்ணின் திருமணத்தை நல்லபடியாக முடித்துக் கொடுத்து விட்டு வா!'' ''அப்படியே செய்கிறேன்!'' என்று மகானை வணங்கி விடைபெற்றுக் கொண்டார். திருச்சியில் உள்ள தன் பிரதிநிதிகளை அனுப்பி விசாரித்து, நேராக குருக்கள் வீட்டுக்குப் போய், ''நாங்கள் காஞ்சி மகான் உத்தரவுப்படி வந்திருக்கிறோம். உங்கள் பெண்ணின் திருமணத்தை நல்லவிதமாக நடத்தித் தரச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்'' என்று சுருக்கமாகச் சொன்னவர்கள் 'மட மட' வென காரியங்களைக் கவனித்தனர். ஊரார் வியக்கும்படி திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இங்கு முக்கியமான விஷயம் என்னவென்றால், பெரியவா பக்தையான குருக்களின் மனைவி, தன் வாழ்நாளில் ஒரு தடவை கூட பெரியவாளை நேரில் தரிசித்தது கிடையாது!! சாட்சாத் பரமாத்மா நம் பெரியவா! பெரியவாள் வாழும் காலத்திலே நாமும் வாழ்கிறோம் என்பதுதான் எத்தனை பெரிய பாக்யம் ! அவரைப் பார்ப்பதற்கும் அவரது அருள் வாக்கைக் கேட்பதற்கும் என்ன தவம் செய்தோமோ?

பி.முரளி, தி.நகர்

## திருநெல்வேலி [இருட்டுக்கடை] அல்வா - அறியாத தகவல்கள்-

திருநெல்வேலி இருட்டுக்கடை அல்வா கடை பற்றி கேள்விப்படும் பல தகவல்கள் ஆச்சரியமாக இருக்கிறது . 1930 - 1940 களில் ராஜஸ்தானை சேர்ந்த பிஜிலி சிங் என்பவர் துவங்கி அதன் பின் கிருஷ்ணசிங் மற்றும் அவருடன் இணைந்து அடுத்த தலைமுறையை சேர்ந்தவர்கள் நடத்தி வருகிறார்கள் இக்கடையை ! மாலை ஐந்தரை அளவில் தான் கடையே திறக்கப்படுகிறது. அடுத்த மூன்று மணி நேரத்திற்குள் மொத்த ஸ்டாக்கும் காலியாகி விட கடையை மூடி விட்டு கிளம்பி விடுகிறார்கள். மற்ற கடைகளை விட இங்கு அல்வா நிச்சயம் அட்டகாசமாய் இருக்க முக்கிய காரணமாக சொல்லப்படுவது இது தான்: அல்வாவிற்கு தேவையான கோதுமையை இவர்கள் கைகளால் தான் அரைக்கிறார்கள். மேலும் அதை தயார் செய்வதும் Manual முறையில் தான் ! இது தான் அல்வாவிற்கு ஒரு யூனிக் சுவை தருகிறதாம். மேலும் இந்த அல்வா தயாரிக்கும் முறை இவர்களுக்கு மட்டுமே தெரியும் .. வேறு யாருக்கும் தெரியாது ! இப்படி கையால் தயார் செய்வதால், ஒரு நாளைக்கு குறிப்பிட்ட அளவிற்கு தான் இவர்களால் தயார் செய்ய முடிகிறது. அதனை மட்டும் விற்று முடித்து விட்டு, திருப்தி அடைந்து விடுகிறார்கள். இவர்கள் நினைத்தால் - கிடைத்துள்ள பெயரை வைத்து மெஷின் வைத்து இன்னும் 10 மடங்கு தயார் செய்ய முடியும் - அவ்வளவுக்கும் மார்கெட் இருக்கு என்றாலும் தங்கள் தரம் சிறிதும் குறைய கூடாது என்பதால் - பெரிய அளவில் செல்லாமல் இருக்கிறார்கள். பலகைகளால் ஆன பழைய கால கதவை கவனியுங்கள் ! இருட்டுக்கடை என்று பெயர் வர காரணம் - 1930 களில் கடை துவங்க பட்ட போது, ஒரே ஒரு காண்டா விளக்கு (மண்ணெண்ணெய் விளக்கு) மட்டும் இருக்குமாம். இருட்டாய் இருக்கும் கடை என்பதே பெயராகி ' இருட்டு கடை அல்வா' என்ற பெயர் வந்து விட்டது. இன்றைக்கு இங்கு காண்டா விளக்கு அகன்று ஒரு 200 வாட்ஸ் பல்பு எரிகிறது அவ்வளவு தான் வித்யாசம். கடைக்கு பெயர் பலகை கூட இல்லை. இருந்தும் கடையின் கூட்டமோ புகழோ குறையவே இல்லை. திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் அருகிலேயே உள்ளது இக்கடை. வேறு கடைகளில் விசாரித்தால் உங்களை மற்ற இடங்களுக்கு மாற்றி விட வாய்ப்பு உண்டு. இக்கடையில் பிஜிலி சிங் அவர்களின் பெயர் போட்டு புகைப்படம் இருக்கும். அது தான் அடையாளம் ! இருட்டு கடை என்கிற பெயரில் இன்னொரு கோஷ்டி காபி ரைட் வாங்க, அவர்கள் மேல் இவர்கள் வழக்கு துவங்கி தங்கள் கடை பற்றி பல வருடங்களாக பத்திரிக்கைகளில் வெளி வந்த குறிப்புகளை காட்டி தங்களுக்கு தான் அந்த பெயருக்கு உரிமை உண்டு என போராடி வருகிறாகள். இவர்களின் குழும கடையாக சற்று தள்ளி விசாகா சுவீட்ஸ் என்ற கடை இருக்கிறது. இங்கும் இருட்டு கடை அல்வா பகல் வேளைகளில் கிடைக்கிறது ( பிஜிலி சிங் படம் இங்கும் இருக்கும்) உள்ளூர் வாசிகள் நூறு கிராம் அல்வா சுட சுட வாங்கி கொண்டு ஓரமாக நின்று ருசித்து சாப்பிட்டு விட்டு, சைடில் சென்று கை நீட்ட , சற்று மிக்சர் இலவசமாக தருகிறாகள். அதை சாப்பிட்டு விட்டு அங்கு மாட்டியுள்ள பேப்பரை எடுத்து கை துடைத்து கொண்டே செல்வதை காண முடிந்தது. சில நேரங்களில் கியூவில் நின்றும் வாங்கி செல்வதுண்டாம். எப்பவும் கால் கிலோ, அரை கிலோ, ஒரு கிலோ பாக்கெட்கள் தயாராய் இருக்கின்றன. நீங்கள் சென்றவுடன் கேட்கிற அளவை கொடுத்து உடன் அனுப்பி விடுகிறார்கள். இருந்தும் தீபாவளி பொங்கல் நேரங்களில் கூட்டம் மிக அதிகமாகி இருக்கும் அல்வாவை அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டிய சூழலில் ரேஷன் முறையும் அமல் படுத்தப்படுமாம் ! ( ஒரு கிலோ கேட்டால் கால் கிலோ தருவது ! இவ்வளவு அற்புதமான, மிக சுவையான, தமிழகத்தின் நம்பர் : 1 அல்வா - ஒரு கிலோ 140 ரூபாய் என்றால் நம்ப முடிகிறதா? இங்கு வாங்கப்படும் அல்வா ஒரு வாரம் வரை கெடாது ! தாமிரபரணி தண்ணீரில் கிடைக்கும் ஓர் அற்புத சுவை மிகுந்த திருநெல்வேலி அல்வா..!..!

All kinds of
POOJAS, HOMAMS
performed in most
religious way
at your home.
SHRARTHAM CEREMONY
also performed
at our / your place.
Contact :
S.GANAPATHI RAMA SASTRIGAL
Mob: 94444 69174
Address: No.12, T.P.Scheme Road,
Raja Street Extension, Mandaveli,
Chennai - 600 028. (Near BSNL)

# SRI PARTHASARATHY SWAMI SABHA (Estd. 1900)

(Address for Communication : 100, T.P. Koil St., Triplicane, Chennai-5)

## 118th YEAR - DANCE FESTIVAL (From 20-1-2018 to 11-3-2018)

## bharat nritya utsav

**at R.K. SWAMY AUDITORIUM (Sir Sivaswamy Kalalaya S.S. School)**
**5, Sundareswarar Street, Mylapore, Chennai – 600 004.**

### Programme Schedule for February 15th - 28th, 2018

**15-2-2018 ( Thursday)**

5.45 p.m. Bharatanatyam By Students of Guru J. Suriyanarayana Murthy
7.15 p.m. Bharatanatyam By MEERA BALASUBRAMANIAN (Disciple of Guru Hari Padman)

**16-2-2018 ( Friday)**

5.45 p.m. Bharatanatyam By SIVARANJANI (Disciples of Guru Padma S.Raghavan)
7.15 p.m. Odissi By VITHYA ARASU and Bharatanatyam By Abhinaya Saraswathi RAMAA (ADHITHI) VENKAT & SAMYUKTHA RAMAN ( Daughter and Disciples of Smt. Ramaa (Adhithi) Venkat)

**17.2.2018 ( Saturday )**

4.00 p.m. Bharatanatyam By SRI KESHINI (Disciple of Guru Malathi Dominic )
5.45 p.m. Kuchipudi by BAWANA NARAYANAN ( Disciple of Guru Madhavi Nambhoodri )
7.15 p.m. Bharatanatyam By NAYANTARA RAI & ARYA PADMAKUMAR (Disciples of Guru Meenakshi Chitharanjan )

**18.2.2018 ( Sunday )**

4.00 p.m. Kuchipudi by LASYA KANNOUR ( Disciple of Guru Madhavi Nambhoodri)
5.45 p.m. Bharatanatyam By VIMALA KARTHIK (Disciple of Guru Madhavi Nambhoodri )
7.15 p.m. Bharatanatyam By RAMYA SURESH (Disciple of Guru B.Bhanumathi )

**19.2.2018 ( Monday )**

5.45 p.m. Bharatanatyam Group Presentation by Students of NRITHIYANJALI SCHOOL OF ARTS ( Disciple of Guru Kaveri Ramesh )
7.15 p.m. Bharatanatyam By RIHA GIRI (Disciple of Guru R. Vijay Madhavan )

**20.2.2018 ( Tuesday )**

5.45 p.m. Bharatanatyam SHIVANYA ( Disciple of Guru Srekala Bharath )
7.15 p.m. Bharatanatyam By S. CHETHANA (Disciple of Guru Kavery Ramesh )

**21.2.2018 ( Wednesday )**

5.45 p.m. Bharatanatyam By RITHIKA SANKAR ( Disciple of Guru Gayathi Sasidharan )
7.15 p.m. Bharatanatyam By ANANYA ANAND (Disciple of Guru Padma S. Raghavan )

**22.2.2018 ( Thursday )**

5.45 p.m. Bharatanatyam By K. JYOTSNA ( Disciple of Guru Kaveri Ramesh )
7.15 p.m. Bharatanatyam By REVATHY SRINIVASARAGHAVAN ( Founder Director Nrityaranjani Fine Arts)

**23.2.2018 ( Friday )**

5.45 p.m. Bharatanatyam By SHREYA L. KAUNDINYA ( Disciple of Guru Padma S. Raghavan )
7.15 p.m. Bharatanatyam By MANASA, SURBHI, ANITHA, APARNA and AISHWARIA (Disciples of Guru Meenakshi Chitharanjan)

**24.2.2018 ( Saturday )**

5.45 p.m. Bharatanatyam By J. ASMITHA ( Disciple of Guru Mahalakshmi Aswin )
7.15 p.m. Bharatanatyam By SUJITHA MENON & MRIDULA S. CHARI (Disciple of Guru Udipi Madhumathy Prakash )

**25.2.2018 ( Sunday )**

4.00 p.m. Bharatanatyam By SAMYUKTHA MENON (Disciple of Guru Gayathri Sasidharan)
5.45 p.m. Bharatanatyam By NAVYA RAM (Disciple of Guru Mahalakshmi Aswin)
7.15 p.m. Bharatanatyam By N. HAMRITHA, POOJA SUBASH, VARSHA SUBASH and M. AMRITHA KIRITIKA (Disciple of Guru Udipi Madhumathy Prakash )

**26.2.2018 ( Monday )**

5.45 p.m. Bharatanatyam By S.S. SAHANA ( Disciple of Guru Archana Mahesh )
7.15 p.m. Bharatanatyam By PRATEESHA SURESH ( Director, Pratishruti Foundation)

**27.2.2018 ( Tuesday )**

5.45 p.m. Bharatanatyam By SNEHASRI SRINIVAS ( Disciple of Guru B.Banumathi )
7.15 p.m. Bharatanatyam By SWATI ATHMANATHAN ( Disciple of Guru C.V.Chandrasekhar)

**28.2.2018 ( Wednesday )**

5.45 p.m. Bharatanatyam By R. KRUTIKA ( Disciple of Guru Deepa Balaji )
7.15 p.m. Bharatanatyam By M.G. POOJALAKSHMI (Disciple of Guru Sujatha Mohan)

## All Are Welcome

# NEWS

### MORE WOMEN IN TAMIL NADU SEEKS LEARNERS LICENSE FOR APPLYING TWO WHEELER SUBSIDY

Women aged between 18 to 40 years thronged various RTOs in the city hoping to get an LLR to apply for the subsidised Amma bike scheme. There were employees of private firms, homemakers, students, government servants waiting in long serpentine queues. Driving school Federation secretary says that in the last one week there has been an increase in the number of women seeking help to apply for the LLR online applications. " We got more than 150 applicants last week which is usually will be is 20" he also said

### FOOD SAFETY CAMPAIGN IN SCHOOLS SET TO BE LAUNCHED

A press release from the State Health Department said a 'Safe and Nutritious Food at School' campaign in the State at 50 Corporation schools will be launched soon. Teachers will be given training on inculcating safe eating habits among students. Heath Minister C.Vijaya Baskar inaugurated the mobile food testing labs that will inspect food stalls. A display board with Dos and Don't's on food safety for stalls was put up and an awareness CD was released..

### CHATRPATHI SHIVAJI AIRPORT MUMBAI ENTERED INTO THE RECORD BOOKS

The Mumbai Airport created a history on Jan'20th and world record for single runway operations by operating 980 arrivals and take-offs in 24 hours or almost one flight every minute. With this record the Mumbai Chhatrapathi Shivaji airport broke its own feat of record of 974flights in 24 hours set earlier in December 6,2017. The U.K.s airport second largest remains the most efficient single-runway airport in the world, Mumbai despite battling a severe space crunch is now headed to achieving the four digit mark flight operation in a 24 hour window soon.

### UPGRADE TECHNOLOGY TO BE PROVIDED AT BUS SERVICES SOON

A senior official of the State Transport department said until the fare hike was effected the STC which were incurring losses of 9 crore daily were short of funds could not take any up gradation of services to public. With the hike now very soon card system, Electronic ticketing, real-time updates were planned and will be introduced soon. Banks which were reluctant earlier to fund the projects are now showing interest to give loans for the project. The infra structure development projects were being planned on a step by step basis. The first step would be to enable the bus fleets with GPS devices and connect to the servers for the public to access real time bus timings through apps the official also said.

### SUNDAY BAZZAR BY VIDYA SAGAR ON FEBRUARY 11TH AT KOTTURPURAM

A press release said ' The Sunday Bazzar' by Vidya Sagar organisers which works with persons with disabilities is starting this new initiative organises a ' The Sunday Bazzar' at the driveway of its premises in Kotturpuram. The bazzar will be held on Feb'11th from 10.30am to 3p.m for members and public. This Sunday it will feature with 24 stalls with displays of products and food, including art, home decor, plants. clothes and games among others. The organization address is Vidya Sagar No1.Ranith road Kotturpuram Chennai 600085.

## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்.........

சர்வீஸ்'க்கு போயிட்டு வந்த 'பைக்கும்',
அம்மா வீட்டுக்கு போயிட்டு வந்த 'wife'ம்
ரெண்டு நாளைக்கு நம்ம
கன்றோள்ள இருக்காது..!!

*******



ஆசையா அடிச்சா அது காதலி....
ஆசை தீர அடிச்சா அது
மனைவி....

*******

திருமண மேடையில்
மணமகனுக்கு கொடுக்கப்படும்
கடைசி வார்னிங் 'பொண்ண
கூப்பிடுங்க..
நல்ல நேரம் முடியப் போகுது'..

*******

வாக்கிங் கூட்டிட்டு போகாத நாய்க்கும், ஷாப்பிங் கூட்டிட்டு போகாத பொண்டாட்டிக்கும் கண்டிப்பா ஒரு நாள் வெறி பிடிச்சுடும்.

*******

மனைவி நம்மிடம் எதிர்பார்ப்பது இரண்டு தான்..
பேசும் போது கேட்டுக்கிட்டே இருக்கணும்..!
ஷாப்பிங் பண்றப்ப பார்த்துக்கிட்டே இருக்கணும்..!

*******

ஆண்பாலாக பிறந்ததற்கு பதில் ஆவின் பாலாக பிறந்திருந்தால்
மனைவிக்கு முன் தைரியமாக பொங்கியிருக்கலாம்

*******

மஞ்ச கயிறு எடுத்து கையில கட்டுனா அது 'காப்பு'..
அதுவே ஒரு பொண்ணு கழுத்துல கட்டுனா
அது நமக்கு நாமே வச்சுக்குற 'ஆப்பு'..!!

# அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்...!

உண்மையோ... உண்மை! 28 ஜனவரி 2018 அன்று ஏழை புற்றுநோயாளிகளின் பாதுகாவலர், திரு.கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்களின் 75வது பிறந்த நாளில், மாதா டிரஸ்ட் நடத்தி வரும் தர்மசாலாவில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக தங்கியிருக்கும் நாங்கள் அவர் மீது பொழிந்த அன்பு மழை, பிரவாகமாக பெருக்கெடுத்தது. ஏழை எளியவர்களின் துயர் தீரவும், மண்ணில் மனிதநேயம் தழைத்தோங்கவும் திரு.கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்கள் நூறாண்டுகள் கடந்து வாழ வேண்டும் என எளியவர்களான நாங்கள் கண்ணீர் மல்க வாழ்த்துரைத்ததும், எங்கள் ஐயா அவர்கள் நெஞ்சம் நெகிழ்ந்து நின்றிருந்ததும் நம் நெஞ்சை விட்டு நீங்கா தருணங்கள்.



எங்களது வாழ்வுக்கு உற்ற துணையாக இருக்கும் ஐயா அவர்களுக்கு நன்றி தெரிவித்து, புற்றுநோயிலிருந்து விரைவில் விடுபட வேண்டும் என நாங்கள் அனைவரும் ஆசி பெற்றோம்.





ஐயா அவர்கள் அவரது பேரப்பிள்ளைகளுடன் வந்து அவர்கள் கையினாலேயே எங்களுக்கு அறுசுவை உணவினை பரிமாறச் செய்தார். மனிதநேயத்தின் மாண்பினை அடுத்த தலைமுறைக்கும் உணர்த்தினார்





தனது பிள்ளைகளாகவே எங்கள் அனைவரையும் எந்தவித பேதமும் இன்றி எண்ணும் ஐயா அவர்கள், தலை வாழை இலை போட்டு உணவு பரிமாறி எங்கள் அருகிலேயே இருந்து வயிறார உண்ணச் செய்தார். உணவின் சுவையை கேட்டறிந்தார்.











"அன்பு செலுத்த மனம் இருந்தால் போதும், வேறு ஏதும் தேவையில்லை" என்று எங்கள் ஐயா சொல்வது எவ்வளவு உண்மை என்று, நாங்கள் ஐயா அவர்களுக்கு கேக் ஊட்ட வேண்டும் என்று கேட்டபோது, மறுப்பேதும் சொல்லாமல் மனமுவந்து ஏற்றுக்கொண்டபோது உணர்ந்தோம்...!





புற்றுநோயின் வலியால் வாடியிருக்கும் நாங்கள் சிகிச்சையை தாண்டி அன்பிற்கும் பாசத்திற்கும், அரவணைப்பிற்கும் என்றும் ஏங்குகிறோம். இந்நிலையில் ஐயா அவர்களை தன் பிள்ளையாய் எண்ணி ஒரு தாய் தழுவிக் கொண்டார். தர்மசாலாவில் நாங்கள் பெறுவது சிறந்த சிகிச்சைக்கும், உயர்தர மருந்துக்கும் மேலான ஒரு நிம்மதியை...!! இதனை ஐயா அவர்களைத் தவிர எங்களுக்கு யார் தருவார்?

ஐயா அவர்கள் தர்மசாலாவில் தங்கியிருக்கும் எங்கள் அனைவருக்கும் அவர்தம் கரங்களினால் வேட்டி மற்றும் சேலைகளையும், கேன்சர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய T-Shirt வழங்கி மகிழ்ந்தார்.



மேரி ஜெஸிந்தா (நோயாளி) மதுரை

உயிர்க்கொல்லி கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு, அடிப்படைத் தேவையை கூட பூர்த்தி செய்துகொள்ள முடியாத என்னைப் போன்றோர்களுக்கு, சாதி, மத, இன பாகுபாடின்றி உணவு, உறைவிடம், மருந்து மற்றும் போக்குவரத்து செலவு, உயிர்காக்க உதவும் சத்துமாவு ஆகியவற்றை அளித்து எங்களை அவர்தம் குடும்ப உறுப்பினராகவே பாவித்து ஏழை புற்றுநோயாளிகளுக்காகவே வாழும், "ஏழையின் சிரிப்பில் இறைவனை காணும்" மாதா டிரஸ்ட் நிறுவனர் திரு.கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்கள், வள்ளுவரின் கூற்றுப்படி உண்மையாகவே வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர் என்பது சத்தியமே!

தர்மசாலாவில் தங்கியிருக்கும் எங்களிடம், ஐயா அவர்கள் பேசும்போது... "நீங்கள் அனைவரும் என் மீது வைத்திருக்கும் அன்பை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், உண்மையில் நீங்கள் ஒவ்வொருவரும் குணமடையும் செய்தியை கேட்கும்போதுதான் எனக்கு பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த மகிழ்ச்சியை இறைவன் ஒவ்வொரு நாளும் எனக்கு தரவேண்டும் என ப்ரார்த்தனை செய்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் குணமடைந்து உங்கள் ஊருக்கு சென்றபின், அங்குள்ளவர்களுக்கு கேன்சர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் எவரேனும் புகையிலை மற்றும் மது பழக்கம் கொண்டிருந்தால், அவர்களுக்கு புகையிலை / மதுவால் ஏற்படும் பாதிப்பை எடுத்துரைத்து, அப்பழக்கத்திலிருந்து அவர்களை மீளச்செய்ய வேண்டும். புற்றுநோய் சிகிச்சை மேற்கொள்ளும் விவரம் அறியாதவர்களுக்கு வழிகாட்டுதல் வேண்டும். புற்றுநோய் என்னும் அரக்கனை ஒழிக்க உங்களால் இயன்றவரை பாடுபடவேண்டும். நீங்கள் உண்மையில் அப்படி செய்வீர்களானால், அதுதான் நீங்கள் எனக்களிக்கும் மிகப்பெரிய பரிசாக இருக்கும். நிச்சயம் நீங்கள் செய்வீர்கள்! நம்புகிறேன்!! " என்றார்



தொடர்பு கொள்ள : 044 2442 0727 / 044 6533 3100

Owned and Published by K. Ganesh, No.37/17, 14th trust cross street, Mandavelipakkam, Chennai - 600028 and Printed by M.V.Murugeshan at Sree K.R.R. Press, New No.19, Old No.7, Aziz Mulk 2nd Street, Thousandlight, Chennai - 600 006. Editor: K.Ganesh